**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>**

**அசல் வழக்கு எண். 19/2023**

2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27 ஆம் நாள் வியாழக்கிழமை சாட்சியாகிய முகம்மது பாருக் **PW1** இன் வாக்குமூலம், 2023 ஆம் ஆண்டு பாரதிய சாக்ஷிய அதிநியம் சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி **திருமதி. P.கனிமொழி, B.L.,** மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

தேதி : 27.03.2025

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | முகம்மது பாருக் | | |
| Father /Husband Name | : | முகம்மது ஜக்ரியா | Court | : |
| Village | : | எடுத்துக்கட்டி சாத்தனூர் | Taluk | : |
| Calling | : | | | |
| Age | : | 64/2025 | | |

<u>சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.</u>

<u>முதல் விசாரணை:</u>

நான் இவ்வழக்கில் வாதி தரப்பு 1வது சாட்சி ஆவேன். வழக்கு விபரங்கள் குறித்து முதன்மை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

29.11.1932 தேதியிட்ட தாவா சொத்தை வாதியின் கொள்ளுபாட்டி செய்குபீவி என்பவர் கிரயம் பெற்றதற்கான கிரய சாசனத்தின் சான்றிட்ட நகல் **வாசாஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 10.03.2022 அன்று இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 41/2021 என்ற வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரையின் சான்றிட்ட நகல் **வாசாஆ 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.10.03.2022 அன்று இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 41/2021 என்ற வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல் **வாசாஆ 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 29.07.2021 வாதி பெயரில் உள்ள சொத்துவரி ரசீது அசல் **வாசாஆ 4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க முதல் விசாரணையின் தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.